FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, யூன்- 2017

# Term Examination, June - 2017

| ஐரோப்பிய வரலாறு | தரம் :- 13 (2017) | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

❖ அறிவுறுத்தல்கள்

❖ **இப்பகுதியில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இவ்வினாபத்திரத்தில் விடை எழுதுக. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் ஐவைந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சரியானது ஒரு வினாவுக்கு உரிய சரியான விடையைத் தெரிவு செய்து பின் அதனை இப்பத்திரத்திலேயே அறிவுறுத்தல்களுக்கமையக் குறிப்பிடுக.**
**இப்பகுதிக்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்**

## பகுதி – I

❖ **1 – 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன அவ் ஐந்தினுள் ஒன்று மற்றவையோடு பொருந்தாது. பொருந்தாததைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டினுள் இடுக.**

1) 1) அல்பஸ் 2) அப்பென்னைன்ஸ் 3) பிரனிஸ் 4) கோகஸஸ் 5) இமயம்

2) 1) கீல் 2) ஜிப்ரோடர் 3) பொஸ்பரஸ் 4) டானனஸ் 5) ஹட்சன்

3) 1) பைதகரஸ் 2) தொலமி 3) சோக்கிரட்டீஸ் 4) அலெக்சான்டர் 5) பிளினி

4) 1) ஒகஸ்றறஸ் 2) ஜீலியஸ் 3) நீரோ 4) பெரிகிளிசன் 5) பிலிப்

5) 1) முஸ்லீம்கள் 2) யுதர் 3) விசுகொதியர் 4) ஹங் 5) வன்டோவர்

6) 1) ஓரேஞ் 2) கைசர் 3) பூர்பன் 4) ரியூட்டர் 5) ஹனோவர்

7) 1) வஸ்கொடகாமா 2) பார்த்தலோமியோ டயஸ் 3) கடலோடிஹென்றி 4) கிறிஸ்டோபர் கொலம்பஸ் 5) மகலன்

8) 1) ஹிட்லர் 2) வின்சன்சேர்சில் 3) நெப்போலியன் 4) கைசர்வில்லியம் 5) முசோலினி

9) 1) பூட்டோஸ்புட்டோஸ்காலி 2) பாங்கீமூன் 3) கோபிஅனாள் 4) மண்டேலா 5) ட்ரிக்வலி

10) 1) புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி (IBRD)
2) வர்த்தகம் தீர்வை பற்றி ஐக்கிய நாடுகளின் மாநாடு (GATT)
3) வடஅத்திலாந்திக் நாடுகள் ஒன்றியம் (NATO)
4) உலக சுகாதார தாபனம்
5) உலக உணவுத்திட்டம் (WEP)

❖ **11 – 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11) 1) நூற்றாண்டுப் போர் - இங்கிலாந்து ஸ்பானியாவும்
2) நைல் யுத்தம் - பிரான்சும் இங்கிலாந்தும்
3) ஜேனாப்போர் - பிரான்சும் பிரஷ்யாவும்
4) மஜன்டாப் போர் - சார்டீனியாவும் ஒஸ்திரியாவும்
5) ஏழுவாரப் போர் - ஒஸ்திரியாவும் பிரஷ்சியாவும்

12) 1) ivம் ஹென்றி – பிரான்ஸ்மன்னன் 2) vii ஆம் ஹென்றி - இங்கிலாந்து அரசன்
3) சாள்ஸ் அல்பேட் - ஸ்பானியமன்னன் 4) 1ம் நிக்கலஸ் - ரஷ்யசக்கரவர்த்தி
5) 1ஆம் வில்லியம் - ஜேர்மனியின் கைசர்

13) 1) ஸ்பானிய கடற்படை அழிவு – 1ம் எலிசபெத்
2) வார்ட்டலு போரில் வெற்றி – வெலிங்டன்
3) இத்தாலியின் இணைப்பு – கரிபோல்டீ
4) ஜேர்மனியின் இணைப்பு – iiiம் நெப்போலியன்
5) சோசலிசத்தின் வெற்றி – லெனின்

14) 1) றிச்செல்யூ - பிரான்சின் பிரதம மந்திரி
2) காஸின்றே - இங்கிலாந்தின் பிரதம மந்திரி
3) மெற்றேர்னிக் - ஒஸ்திரியாவின் சான்செலன்
4) கவூர் - பீட்மன்ற சார்பீனியப் பிரதம அமைச்சர்
5) பிஸ்மார்க் - பிரஷ்யாவின் சான்செலர்

15) 1) ஜிரொண்டினார் - ஸ்பானியா 2) ஜேருபினர் - பிரான்ஸ் 3) நாசிசம் - ஜேர்மனி
4) பாசிஸம் - இத்தாலி 5) மென்செவிக்கினர் - ரஷ்யா

❖ **16 – 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுக்கள் / திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் x,y என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுக்கள் / திகதிகள் *x* நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோவொரு வகையிலே தொடர்புபடடவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கிலே தரப்படவில்லை. y நிரலில் உள்ளவற்றை *x* நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும் போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

16)

| X | Y |
|---|---|
| 1) சியூஸ் | A) காமதேவதை |
| 2) பொசைடன் | B) அறிவுகைவினைப்பணிகள் தேவதை |
| 3) அப்ரோடைற் | C) வானத்தின் கடவுள் |
| 4) அதீனா | D) வைன் கடவுள் |
| 5) டயனீஸஸ் | E) கடற்தெய்வம் |

1) DCEAB 2) CEABD 3) DEACB 4) BEACD 5) EADCB

17)

| X | Y |
|---|---|
| 1) பொற்றிசெல்வி | A டெவிட் |
| 2) லியானாடோ டாவின்ஸி | B மோலோ |
| 3) ரபேயல் | C மொனலிஸா |
| 4) டொனற்றெலோ | D அதென்ஸ் |
| 5) மைக்கேல்ஞ்ஜெலோ | E வீனஸ் உற்பத்தி |

1) EABDC 2) EBDAC 3) ECDAB 4) EDBCA 5) EACDB

18)

| X | Y |
|---|---|
| 1) சிவப்பு ரோஸ்மலர்கள் | A ஜேக்கபின் |
| 2) வங்காஸபார் | B பொல்ஷெபிக் |
| 3) விக் | C ஜோர்க் |
| 4) ஜிரோன்டின் | D வெள்ளை ரோஸ்மலர் |
| 5) மென்ஸ்ஷெபிக் | E ரோறி |

1) DECBA 2) DCEAB 3) DABCE 4) DBAEC 5) DEBAC

19)

| X | Y |
|---|---|
| 1) தோமஸ்மோர் | A தேசங்களின் செல்வம் |
| 2) அடம்ஸ்சிமித் | B சட்டநுட்பங்கள் |
| 3) மொன்ரெஸ்கியூ | C சமூக ஒப்பந்தம் |
| 4) ரூசா | D யூற்ரோபியா |
| 5) கொப்ஸ் | E லெவியாந்தன் |

1) DECBA 2) DCEAB 3) DABCE 4) DBAEC 5) DEBAC

| | X | Y |
|---|---|---|
| 20) | 1) மார்ட்டின்லூதர் | A பிரெஞ்சிப் புரட்சி |
| | 2) மூன்றாம் வில்லியம் | B ரஷ்யப்புரட்சி |
| | 3) றிச்சட் ஆர்க்றைற் | C ஒளிமிகு புரட்சி |
| | 4) மிராவோ | D கைத்தொழிற் புரட்சி |
| | 5) லியோன் றொற்ஸ்கி | E சமயசீர்திருத்தப் புரட்சி |

1) EABDC 2) EBDAC 3) ECDAB 4) EDBCA 5) EACDB

| | X | Y |
|---|---|---|
| 21) | 1) புதிய உலகம் | A ஆபிரிக்காக் கண்டம் |
| | 2) இருண்ட கண்டம் | B துருக்கி |
| | 3) ஐரோப்பாவின் நோயாளி | C பிரித்தானியா |
| | 4) ஒரு புவியியல் வர்ணிப்பு மட்டும் | D இத்தாலி |
| | 5) கடைக்காரர்களின் தேசம் | E அமெரிக்கா கண்டம் |

1) EABDC 2) EBDAC 3) ECDAB 4) EDBCA 5) EACDB

| | X | Y |
|---|---|---|
| 22) | 1) உற்ட்றெச்ற் ஒப்பந்தம் | A 1829 |
| | 2) ஏத்திரியம் நோபிள் உடன்படிக்கை | B 1859 |
| | 3) விலாபிராங்கா உடன்படிக்கை | C 1866 |
| | 4) பிராக் உடன்படிக்கை | D 1713 |
| | 5) பிராங்போர்ட் உடன்படிக்கை | E 1871 |

1) DECBA 2) DCEAB 3) DABCE 4) DBAEC 5) DEBAC

| | X | Y |
|---|---|---|
| 23) | 1) பிஸ்மார்க் | A கருஞ்சட்டைப் படையினர் |
| | 2) கரிபோல்டி | B செம்படையினர் |
| | 3) லெனின் | C மண்ணிறச்சட்டைப் படையினர் |
| | 4) முசோலினி | D குருதியும் இருப்பும் |
| | 5) ஹிட்லர் | E செஞ்சட்டையினர் |

1) DECBA 2) DCEAB 3) DABCE 4) DEAEC 5) DEBAC

| | X | Y |
|---|---|---|
| 24) | 1) இத்தாலி | A பிரசல் |
| | 2) அயர்லாந்து | B ஸ்ரொக்கோம் |
| | 3) நோர்வே | C ஒஸ்லோ |
| | 4) சுவீடன் | D உரோம் |
| | 5) பெல்ஜியம் | E டப்ளின் |

1) DECBA 2) DCEAb 3) DABCE 4) DBAEC 5) DEACB

| | X | Y |
|---|---|---|
| 25) | 1) நட்சத்திரஅவையம் | A நெப்போலியன் பொனபாட் |
| | 2) பிரமாண்டமான கடற்படை | B ஹென்றி vii |
| | 3) கைதுசெய்வதற்கான அனுமதிப்பத்திரம் | C பிஸ்மார்க் |
| | 4) ஐரோப்பிய கண்டபொருளாதார முறை | D பிலிப் ii |
| | 5) பண்பாடுகளிடையான முரண்பாடு | E லூயி iii |

1) EABDC 2) EBDAC 3) ECDAB 4 ) EDBCA 5) EACDB

The National e-learning Portal for The General Education

❖ 26 – 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A) (B) (C) (D) என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும் சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்து
(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் 1 எனவும்
(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் 2 எனவும்
(C) யும் (D) யும் மட்டும் சரியாயின் 3 எனவும்
(D) யும் (C) யும் மட்டும் சரியாயின் 4 எனவும்
ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் அடைப்புப்புள்ளிக் கோட்டில் எழுதுக.

அறிவுறுத்தல்களின் சுருக்கம்

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (D) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரி |

26) மேல்வருவனவற்றில் கிரேக்கத்தில் காணப்பட்ட கல்வி நிலையங்கள்
A) அக்கடமி B) பொலஞ்சா C) லைசியம் D) பாதுவா

27) மேல்வருவனவற்றில் கொன்ஸ்தாந்தி நோபிளின் பெயர்கள்
A) அலைஸ்தாந்திரியா B) இஸ்தான்புல் C) பைசாந்தியம் D) சரோய்

28) மேல்வருவோரில் ரஷ்யபுரட்சியடன் தொடர்புபட்டவர்கள்
A) ஸ்டாலின் B) கோர்பஷேவ் C) லெனின் D) றொஸ்கி

29) ஐ.நா வின் உருவாக்கத்துக்கு காரணமான தலைவர்கள்
A) ரூஸ்வெல்ட் B) வின்சன் சேர்சில் C) ஹிரோகித்தோ D) ஹிட்லர்

30) மேல்வருவோரில் பிரான்ஸின் முதலமைச்சர்களாக விளங்கியோர் யார்
A) ஹென்றி ஹட்சன் B) றிச்செலியூ C) மஸாறின் D) வேல்ற்டயர்

❖ 31 – 35 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன அவற்றில் ஒன்று உரிய தலைப்புடன் பொருந்தாது அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புப்புள்ளிக் கோட்டில் எழுதுக.

31) மதசீர்திருத்தம் ஏற்பட்டமைக்கான காரணம்
1) பாவமன்னிப்பு பத்திர விற்பனை
2) குருமார்களின் ஆடம்பர வாழ்க்கை
3) மார்டின் லூதர் 95 நியாயங்களை காட்சிப்படுத்தியமை
4) ஜேர்மன் ஐக்கியபடுத்தப்பட்டமை
5) ஜேர்மன் சிற்றரசர்களின் மறைமுக ஆதரவு.

32) முப்பதாண்டுப் போரின் பிரதான கட்டங்கள்
1) பொஹிமியக் கிளர்ச்சி 2) நோர்வேயின் தலையீடு 3) டென்மார்க்கின் தலையீடு
4) சுவீடன் தலையீடு 5) பிரான்சின் தலையீடு

33) நெப்போலியனுடைய சீர்திருத்தங்கள்
1) மாகாண ஆட்சிமுறை சீராக அமைக்கப்பட்டது.
2) பாப்பரசருடன் சமயம் தொடர்பான உடன்படிக்கை ஏற்பட்டது.
3) பேச்சுச் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டது.
4) பிரெஞ்சுவங்கி உருவாக்கப்பட்டது.
5) பொதுவான சட்டக் கோவை உருவாக்கப்பட்டது.

34) நாஸிஸம்
1) ஜேர்மனியில் ஆரம்பாகிறது
2) இதன் தலைவர் ஹிட்லர் ஆவார்.
3) பாஸிஸடன் தொடர்புடையது
4) ஜனநாயகத்தின் இன்னுமோர் வடிவமாகும்.
5) இரண்டாம் உலகப் போருக்கு காரணமாக அமைந்தது.

35) சா்வதேச சங்கம்

1) அமெரிக்கா பங்குபெறவில்லை.
2) ஜோ்மனி பங்கு பெறவில்லை.
3) ரஷ்யா பங்கு பெறவில்லை.
4) அஸ்திரியா பங்கு பெறவில்லை.
5) இத்தாலி பங்கு பெறவில்லை.

❖ **36 – 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடா்பாகவும் உள்ள கூற்றுச்சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 1. சரியானது | பிழையானது |
| 2. சரியானது | சரியானது |
| 3. பிழையானது | பிழையானது |
| 4. பிழையானது | சரியானது |
| 5. சரியானது | சரியானதும் முதலாம் கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 36) | மானியமுறையில் அதிகார பரவலாக்கம் காணப்பட்டது. | ஜோ்மனியில் சாக்ஸினி சிற்றரசன் மதசீா்திருத்தத்துக்கு உதவினாா். (…….) |
| 37) | மறுமலா்ச்சிக் காலத்தில் இங்கிலாந்தில் கேம்பிறிஜ், ஒக்ஸ்போா்ட் பல்கலைக்கழகங்கள் ஆரம்பமானது. | கொலம்பஸ் உலகினை சுற்றி பயணம் செய்து உலகம் உருண்டையானது என நிரூபித்தாா். (…….) |
| 38) | ஜோ்மன் ஐக்கியத்துக்கு விக்ரா் இமானுவேல் அரசன் தலைமை வகித்தான். | ஜோ்மனி ஐக்கியப்படுத்தப்பட்ட போது இங்கிலாந்துடன் போா் புரிந்தது. (…….) |
| 39) | ஜோ்மனி போலந்தை ஆக்கிரமித்தமையால் 2ம் உலகப்போா் ஏற்பட்டது. | ஜோ்மனி தலைமையிலான அச்சு அணியில் இத்தாவி, யப்பான் ஆகிய நாடுகள் அங்கம் வகித்தன. (…….) |
| 40) | லெனின் தலைமையிலான ரஷ்யபுரட்சியால் ரஸ்யா சமஉடமை நாடாக உருவானது. | சமஉடமைக் கருத்துக்களை பரப்பவும் சமஉடமை நாடுகளை பாதுகாக்கவும் நேட்டோ அமைப்பு உருவாக்கப்பட்டது. (…….) |

The National e-learning Portal for The General Education

## பகுதி – II

❖ **முதலாம் வினாவுக்கும் எவையேனும் வேறு மூன்று வினாக்களுக்கும் விடைதருக.**
**(1ம் வினாவுக்கு விடை அளிப்பதற்கு ஐரோப்பாவின் புறவுருவப்படம் வழங்கப்படும்)**

01) மேலே தரப்பட்ட இடங்கள் எல்லாவற்றையும் உமக்கு வழங்கப்பட்ட புறுவுருவப்படத்திலே குறித்து பெயரிடுக. அவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புக்கள் எழுதுக.

1) கொன்ஸ்தாந்திநோபிள்
2) எஜியன்கடல்
3) றைன்நதி
4) போலந்து
5) லண்டன்
6) அல்ப்ஸ்
7) நோர்வே
8) கருங்கடல்

(படம் குறித்தல் 8 x 1 = 8 புள்ளிகள்
சிறுகுறிப்பு எழுதுதல் 2 x 5 = 10 புள்ளிகள்
மொத்தம் 10 + 8 = 18 புள்ளிகள்)

02) மேல்வரும் தலைப்புக்களில் உரோமரின் ஆதிக்கப்படர்ச்சியை சுருக்கமாகப் பரிசீலனை செய்க.
1) இத்தாலியைக் கைப்பற்றியமை
2) பியூனிக் போர்.
3) கிரேக்க அரசுகளை அடக்கியமை.

03) 15ஆம் 16ம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகியன புதிய நாடுகளைக் கண்டுபிடித்தமை பற்றிச் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளி)
அவற்றின் விளைவுகளை பரிசீலனை செய்க (8 புள்ளி)

04) ,,அமெரிக்க சுதந்திரப் போருக்கு அரசியல் பொருளாதாரம் ஆகிய இரண்டு துறைசார்ந்த காரணங்கள் ஏதுவாக இருந்தது.'
1) அமெரிக்காவின் பெரும் நிலப்பரப்பில் கரையிறங்கிய முதல் ஐரோப்பியர் யார்? (6புள்ளி)
2) இங்கிலாந்து மக்கள் வடஅமெரிக்காவிற்கு சென்றமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)
3) அமெரிக்க சுதந்திரப் போருக்கான விதிக்கப்பட்ட புதிய வரிகள் 3 தருக? (3 புள்ளி)
4) இங்கிலாந்தின் நடவடிக்கைகளே அமெரிக்க சுதந்திரப்போருக்கு காரணமாகியது என்பதை மேல்தரப்பட்ட கூற்றுடன் தொடர்புபடுத்தி ஆராய்க. (8 புள்ளி)

05) "பிரான்சியப்புரட்சியின் குழந்தையே நெப்போலியின் போனபாட்"
1) நெப்போலியன் போனபாட் எங்கு பிறந்தான்? (1புள்ளி)
2) நெப்போலியன் அரசனாகும் வரை அவனது வாழ்க்கைச் சரித்திரத்தையும் சுருக்கமாக விளக்குக.? (5 புள்ளி)
3) வியன்னா மகாநாடு நெப்போலியன் உருவாக்கிய புரட்சி சீர்திருத்தங்கள் எவ்வாறு இல்லாதொழித்தது என ஆராய்க? (8 புள்ளி)

06) இத்தாலியை இளைப்பதில் மசினி, கபூர், கரிபோல்டி ஆகியோரின் சாதனைகளின் முக்கியத்துவத்தை ஒப்பீட்டு அடிப்படையில் ஆராய்க. (14 புள்ளி)

07) 1) ரஷ்யாவில் 1917இல் நடைபெற்ற பொல்ஷவிக் புரட்சியின் பின்னணியை விபரிக்குக. (7புள்ளி)
2) பொல்ஷவிக் கட்சியினர் வெற்றி பெற்றமைக்கான காரணங்களை விபரிக்குக. (7புள்ளி)

08) 1) முதலாம் உலகப்போருக்கான காரணங்களை பரிசீலனை செய்க. (7புள்ளி)
2) முதலாம் உலகப்போரின் விளைவுகளை விளக்குக. (8புள்ளி)

**பகுதி 'அ' அல்லது 'ஆ' விற்கு மட்டும் விடை தருக.**

09)

அ. இரண்டாம் உலகப்போா முடிந்த பின்னுள்ள முதலாவது தசாப்தத்திலே உலக வல்லரசுகள் எவ்வாறு இரு அணிகளாக பிரிந்தன என்பதை பரிசீலனை செய்க. (14புள்ளி)

ஆ. 1960ஆம் ஆண்டு வரை ஐக்கிய நாடுகள் சபை எந்தளவிற்கு உலக சமாதானத்தை பேணிக்கொள்ள முடிந்தது என்பதை உதாரணங்களோடு ஆராய்க. (14புள்ளி)




The National e-Learning Portal for The General Education